## 34 விடை இலச்சினை இட்ட படலம்

காஞ்சியிலுள்ள காடுகள் அனைத்தையும் வெட்டி நகரமாக்கிய காடுவெட்டி சோழன் ஓர் சிறந்தசிவ பக்தன். சிவ புரணங்களை தவறாமல் நாள் தோறும் கேட்பான்.

காடுவெட்டி சோழனுக்கு மதுரையில் வாழும் அங்கயற் கண்ணியையும், சோமசுந்தர்ரையும் தரிசிக்க மிகுந்த ஆசை உண்டாயிற்று. அதே நினைவில் படுத்த சோழனின் கனவில், வெள்ளி அம்பலத்தான் சித்தர் வடிவில் தோன்றி அன்றிரவே தன்னந் தனியனாக வந்து தன்னை தரிசித்துச் செல்லுமாறுகூறியருளினார்.

சோழனும் தனியாக அன்றிரவே மதுரை மாநகர் நோக்கி புறப்பட்டான். வழியில் வைகை ஆற்றை அடையும் போது வெள்ளம் கரை புரண்டோடியது. வெள்ளத்தைக் கண்ட மன்னன் உள்ளம் கலங்கினான். மறுபடியும் சிவபெருமான் சித்தர் வடிவில் தோன்றி, வெள்ளத்தை வற்றும்படி செய்தார். பின் மன்னனை அழைத்துக் கொண்டு வைகை ஆற்றினைக் கடந்து, வடக்குமதில் வாயிலை திறந்து, கட்டுக் காவல்களைத் தாண்டி சோழனை கோயிலினுள் அழைத்துச் சென்றார்.

அவன் பொற்றாமரைத் தீர்த்தத்தில் நீராடிய பின் ஐயனின் கருணையைப் போற்றி நீண்ட நேரம் துதிபாடினான். சித்தர், பாண்டிய மன்னன் இதனை அறிந்தால் ஆபத்துநேரிடும் என்று துரிதப்படுத்தி சோழனை வைகையாறு வரை சென்று நெற்றியில் திருநீறு இட்டு வழி அனுப்பினார். பின் திரும்பவும் கோயிலுக்குச் சென்று, வடக்கு மதில் வாயிலை மூடி, ரிஷப முத்திரையிட்டார்.

காலையில் வாயில் திறப்பவர்கள், வடக்குவாயிலில், ரிஷபக்குறி பொறிக்கப்பட்டுள்ளதைக் கண்டு அஞ்சினர். குலபூக்ஷண பாண்டியனிடம் சொல்ல, பாண்டியனும் இந்தமாயையைச் செய்தவர்யாராக இருக்கக்கூடும் என்றுகவலைக் கொண்டு சிந்தித்துக்கொண்டு, அன்றிரவுதரையில்படுத்துஉறங்கினான்.

அன்றிரவு சிவபெருமான் குலபூஷணின் கனவில் தோன்றி, காடு வெட்டி சோழன்தன்னைக்காணமிகுந்தஆசைக்கொண்டதால், தானே வடக்கு வாயிலைத் திறந்து, தரிசனம் செய்து வைத்ததாக கூறினார். அவனை அனுப்பிய பின் வடக்கு வாயிலை தாழிட்டு ரிஷப குறியையும் தானே இட்டதாக கூறினார்.

மன்னனும் ஐயனின் திருவிளையாடலை அனைவரிடத்தும் கூறி மகிழ்ந்தான். சில காலத்திற்கு பின் குல பூஷண பாண்டியன் தன் மகன் இராஜேந்திரனுக்கு முடி சூட்டிய பின் இறைவன் திருவடி அடைந்தான்.

**பல்லவி**

கனவில் சித்தராய் வந்து காடு வெட்டி சோழனை
தனியனாய் வந்துன்னை தரிசிக்கச் சொன்னாய்

**அனுபல்லவி**

மன வலிமையுடன் வந்தவனை வழியில்
வைகை வெள்ளம் வந்து தடுத்திட்டது

**சரணம்**

திரும்பவும் சித்த வடிவில் சோழன் கைபிடித் துன்னை
தரிசிக்க செய்த பின் விபூதியிட்டனுப் பினீர்
திருக்கோயில் வடக்கதவில் இடபக்குறி கண்டு
இடிந்த பாண்டியன் கனவில் நடந்ததை உரைத்தீர்